புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • நவம்பர் 14, 2024 • புரட்சி 24 • முழக்கம் 45 • விலை ரூ.3.00



# பார்ப்பனர்கள் ஒடுக்கப்படுகிறார்களா?

பார்ப்பனர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வலியுறுத்தி நவம்பர் 3-ஆம் தேதி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்று உள்ளது. பார்ப்பனர்களும், பார்ப்பன அடிவருடிகளும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். பட்டியல்- பழங்குடி சமூகங்களின் பாதுகாப்புக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வன்கொடுமை தடுப்புச் சட்டம் போல பார்ப்பனர்களுக்கும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் வேண்டுமென்று அந்த ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பிறகு நடந்த பல விவாதங்களிலும், தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாவதாகவும், பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வாழ்ந்து வருவது போலவும் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

பார்ப்பனர்களின் பாதுகாப்புக்கு என்ன கேடு வந்துவிட்டது என இப்படிக் கேட்கிறார்கள் என்ற எண்ணம் பலருக்கும் எழக்கூடும். ஏனென்றால் பார்ப்பனர்கள் வீட்டில் பால் பாக்கெட் கெட்டுவிட்டால் கூட, ஆவின் ஊழியர்களே வீடு தேடிச் சென்று புதிய பால் பாக்கெட்டை டோர் டெலிவரி செய்துவிட்டு வரும் அளவுக்கு சுகபோகமாகத்தான் வாழ்கிறார்கள். தில்லை நடராஜர் ஆடுகிறாரோ இல்லையோ, அவரை வைத்து பார்ப்பனர்கள் ஆடும் அடாவடி ஆட்டம் இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. பார்ப்பனர்கள் கோயில் நகைகளைத் திருடினால் எடைக்குறைப்பு, சிலைகளை திருடினால் மாயம் என்று செய்திகளை திரித்து வெளியிட வைக்கும் அளவுக்கு அதிகார பலம் மிக்கவர்களாகத்தான் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் பார்ப்பனர்களை ஒடுக்குகிறார்கள், நசுக்கிறார்கள், அதற்குப் பெரியாரும் திராவிட இயக்கமும்தான் காரணம் என்று கூப்பாடு போடுகிறார்கள்.

ஈராயிரம் ஆண்டுகாலமாக அனுபவித்து வரும் பார்ப்பனிய மேலாதிக்கத்தை, தமிழ்நாடு தவிர்த்துவிட்டு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இப்போதும் அவர்களால் அனுபவிக்க முடிகிறது, ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் அது இயலவில்லை என்ற ஆதங்கத்தில் போடும் கூச்சலாகத்தான் இதைப் பார்க்க முடிகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு பார்ப்பன உறுப்பினர் கூட இல்லை. பாஜக போன்ற கட்சிகளின் சார்பாக நிறுத்தப்படும் பார்ப்பன வேட்பாளர்களையும் தமிழ்நாட்டு மக்கள் நிராகரித்து விடுகிறார்கள். ஆனால் இந்திய நாடாளுமன்றத்தில் பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்ஜாதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 25.8 விழுக்காடு. மக்கள்தொகையில் இவர்கள் எண்ணிக்கை 10 விழுக்காட்டைக் கூட தாண்டாது. மக்கள் தொகையில் 40 விழுக்காட்டிற்கும் மேல் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியிருப்பவர்கள் 25.4 விழுக்காடு மட்டுமே. மோடி தலைமையிலான 71 பேரைக் கொண்ட அமைச்சரவையில் ஓபிசி, எஸ்.சி., எஸ்.டி., சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்கள் 47 பேர் மட்டுமே. ஆனால் மக்கள்தொகையில் இவர்கள் 90 விழுக்காடு. பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்ஜாதியைச் சேர்ந்த ஒன்றிய அமைச்சர்களே எஞ்சியவர்கள்.

ஆட்சியதிகாரத்தில் மட்டுமல்ல, ஒன்றிய அரசின் அதிகார மையத்திலும் நீண்டகாலமாக பார்ப்பனர்களே அதிக ஏகபோக இடங்களை அனுபவித்து வருகின்றனர். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அளித்த தரவுகளே இதை உறுதிப்படுத்துகின்றன. ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் செயலாளர்களாக உள்ள 89 பேரில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவர், பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர் மூவர். பிற்படுத்தப்பட்டவர்கள் ஒருவர் கூட இல்லை. எஞ்சிய 85 பேர் உயர்ஜாதியினர். கூடுதல் செயலாளர்கள் 93 பேரில் பட்டியல் சமூகத்தினர் ஆறு பேர். பழங்குடி சமூகத்தினர் 5 பேர். பிற்படுத்தப்பட்டவர் ஒருவர் கூட இல்லை. எஞ்சியவர்கள் உயர்ஜாதியினர். இணைச் செயலாளர்கள் 275 பேரில் எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 41 பேர் மட்டுமே. எஞ்சியவர்கள் உயர்ஜாதியினர்.

ஆட்சியதிகாரத்தில் மட்டுமல்ல, ஒன்றிய அரசின் அதிகார மையத்திலும் நீண்டகாலமாக பார்ப்பனர்களே அதிக ஏகபோக இடங்களை அனுபவித்து வருகின்றனர். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அளித்த தரவுகளே இதை உறுதிப்படுத்துகின்றன.

குறிப்பாக 2023 அக்டோபரில் ‘யங் இந்தியா’ வெளியிட்ட தரவுகளின்படி, குடியரசுத் தலைவர் மாளிகையின் 49 செயலாளர்களில் 39 பேர் பார்ப்பனர்கள். துணைச் செயலாளர்கள் 7 பேருமே பார்ப்பனர்கள். கேபினட் செயலாளர்கள் 20 பேரில் 17 பேர் பார்ப்பனர்கள். ஒன்றிய பாதுகாப்புத் துறை அலுவலர்கள் 1,579 பேரில் 1,300 பேர் பார்ப்பனர்கள். ஒன்றிய நிதி அமைச்சகத்தின் அலுவலர்கள் 1008 பேரில் 942 பேர் பார்ப்பனர்கள். ஒன்றிய வேளாண் அமைச்சகத்தின் அலுவலர்கள் 274 பேரில் 254 பேர் பார்ப்பனர்கள். ஒன்றிய சமூக நல மற்றும் சுகாதார அமைச்சகத்தின் அலுவலர்கள் 208 பேரில் 132 பேர் பார்ப்பனர்கள். இப்படி எந்தத் துறையைத் தொட்டாலும் அது பார்ப்பனர்களால் நிரப்பப்பட்ட துறையாகவே உள்ளது. ஏனென்றால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 3,600 பேரில் 2,750 பேர் பார்ப்பனர்கள். ஆளுநர் மற்றும் துணை நிலை ஆளுநர்கள் 27 பேரில் 25 பேர் பார்ப்பனர்கள். வெளிநாட்டு தூதர்கள் 140 பேரும் பார்ப்பனர்கள். பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் 116 பேரில் பார்ப்பனர்கள் 108 பேர். உயர்நீதிமன்ற நீதிபதிகள் 330 பேரில் பார்ப்பனர்கள் 306 பேர். உச்சநீதிமன்ற நீதிபதிகள் 26 பேரில் பார்ப்பனர்கள் 23 பேர்.

மிகச் சமீபத்தில் கூட, ஒன்றிய நிதிநிலை அறிக்கை அச்சிடப்படுவதற்கு முன்பாக, வழக்கமாக நடைபெறும் அல்வா கிண்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது பார்ப்பன நிதி அமைச்சரான நிர்மலா சீதாராமன் தனது துறை சார்ந்த சகாக்களுக்கு அல்வா கொடுக்கும் புகைப்படம் வெளியானது. அந்த படத்தில் ஒருவர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி சமூகத்தினர் இல்லையே என அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார் ராகுல் காந்தி. கடந்த ஆண்டு டெல்லியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், உங்களில் எத்தனை பேர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி சமூகத்தினர் என நிருபர்களைப் பார்த்து அவர் கேள்வி எழுப்பியபோது, ஒருவர் கூட தலை அசைக்கவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டைத் தவிர்த்துவிட்டு, அகில இந்திய அளவில் ஊடகத்துறையையும் பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. பத்திரிகை, தொலைக்காட்சிகளின் 90 விழுக்காடு ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள், நிருபர்கள் பார்ப்பனர்களே. தமிழ்நாட்டில் மட்டும்தான் நிலைமை வேறாக உள்ளது.

பட்டியல் சமூகத்தினர் எங்குமே இல்லையா என்றால், ஒரேயொரு இடத்தில் மட்டும் இருக்கிறார்கள். பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கான நலத்துறையின் நாடாளுமன்றக் குழு 2023ஆம் ஆண்டில் அளித்த தரவுகளின்படி, ஒன்றிய அமைச்சகங்களில் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்படுவோரில் 37 விழுக்காடு பட்டியல் சமூகத்தினர். 7.4 விழுக்காடு பழங்குடி சமூகத்தினர். அங்கே மட்டும் பார்ப்பனர் ஒருவர் கூட இல்லை. கோயில்களையும், அரச உயர் பதவிகளையும், நீதித்துறையையும், அரசாங்க பொறுப்புகளையும் பெரும்பகுதி அபகரித்து வைத்திருக்கிற பார்ப்பன சமூகம், ஜாதியின் பெயரால் தினம் தினம் வன்கொடுமைகளுக்கு ஆளாகிற சமூகங்களின் பாதுகாப்புக்கு இருக்கும் சட்டத்தை, கேட்பது இடஒதுக்கீட்டை அழிக்க உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 விழுக்காடு இடஒதுக்கீடு பெற்றதைப் போலத்தான் உள்ளது. பார்ப்பனர்களின் இந்த நீலிக்கண்ணீரை தமிழ்நாடு ஒருபோதும் நம்பாது.

ர.பிரகாசு

தலையங்கம்

# அர்ச்சகர் சட்டத் தடை; முதல்வருக்கு வேண்டுகோள்!

அனைத்து ஜாதியும் அர்ச்சகராகும் உரிமை பக்தி சார்ந்தது அல்ல; அது சுயமரியாதை சார்ந்தது. ‘சூத்திரர்கள்’ என்ற இழிவைக் கடவுள் வழியாக பெரும்பான்மை மக்கள் மீது சுமத்தி வந்த ‘‘பிராமணிய’’ வல்லாதிக்கத்தை தகர்க்கும் சமத்துவத்துக்கான போராட்டம், பெரியார் தனது இறுதிப் போராட்டமாக இதை அறிவித்தார். தி.மு.க. ஆட்சிக்கு வந்த 100வது நாளில் இந்த சமூகப் புரட்சியை அறிமுகப்படுத்தியது.

அண்மையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் (நவம்பர் 12,2024) தனது சமூக வலைதளத்தில் ‘‘அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராவதைத் தடுக்கும் அனைத்துத் தடைகளையும் அரசு தகர்க்கும். ஒரு காலத்தில் வீதிகளில் நடப்பதற்குக் கூட தடை போட்டனர். அதை எதிர்த்து நின்றது திராவிட இயக்கம். கர்ப்ப கிரகத்தில் நுழைய உங்களுக்கு தகுதி இருக்கிறதா என்று கேட்டார்கள்; தகுதி உண்டு என்று கூறி சட்டம் கொண்டுவந்தோம். இந்த சட்டம் நிறைவேற எந்தத் தடை வந்தாலும் தகர்ப்போம்’’ என்று உணர்வுபூர்வமாக பதிவு செய்துள்ளார்.

2024ம் கல்வி ஆண்டில் கோயில்களில் நடத்தப்பட்ட ஓராண்டு அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் படித்த 115 மாணவர்களுக்கு அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சான்றிதழ்களை வழங்கியிருக்கிறார். இதில் 11 பேர் பெண்கள். அனைவரும் ஓதுவார் பயிற்சி பெற்றவர்கள். இந்து அறநிலையத்துறையின் கீழ் அரசு அதிகாரிகளாக பெண்களையே நியமிக்கத் தடை இருந்தது. திராவிடர் விடுதலைக் கழகம் தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இத்தடையை தகர்த்தது. வாதாடி வெற்றி பெற்றவர் வழக்கறிஞர் எஸ்.துரைசாமி. அதன்பிறகு தான் அறநிலையத்துறையில் பெண்கள் அதிகாரிகளாக வர முடிந்தது. பார்ப்பனரல்லாத பெண்கள் தடைகளைத் தகர்த்து அதிகாரிகளாக வந்திருக்கிறார்கள்.

ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கப்பட்ட பண்பாட்டுப் புரட்சியான இத்திட்டம், இப்போது பல்வேறு சட்டத் தடைகளை சந்தித்து முடங்கி நிற்பதை முதல்வரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

அமைச்சர் சேகர்பாபு சுட்டிக்காட்டியிருப்பதைப் போல இதுவரை 29 அர்ச்சகர்களுக்கு மட்டுமே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2008இல் பயிற்சியை முடித்துவிட்டு 16 ஆண்டுகளாக காத்திருக்கும் 178 மாணவர்களுக்கும், 2021இல் படித்து முடித்த 204 மாணவர்களுக்கும் பணி நியமனங்கள் வழங்கப்படவில்லை. இப்போது ஓராண்டு பயிற்சி முடித்துள்ள 115 பேருக்கு தேர்வுச் சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. பயிற்சிப் பெற்றவர்களில் ஏற்கனவே அய்ந்து பேர் மரணமடைந்துவிட்டனர். ஏற்கனவே பணி நியமனம் பெற்ற 24 தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அர்ச்சகர்கள், பல கோயில்களில் பார்ப்பன அர்ச்சகர்களின் அவமதிப்பு – புறக்கணிப்புகளை எதிர்கொண்டு கடமையாற்றி வருகிறார்கள்.

இத்திட்டத்தை முன்னெடுக்க விடாது நீதிமன்றத்துக்குப் பார்ப்பனர்கள் படையெடுத்துவருகிறார்கள். மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி ஜி.ஆர். சாமிநாதன், இரண்டு அர்ச்சகர்கள் நியமனங்கள் ஆகமத்துக்கு எதிரானது என்று கூறி தடை விதித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த முனீஸ்வர் நாத் பண்டாரி, அர்ச்சகர் நியமனம் தொடர்பாக அறநிலையத்துறை சட்டத்தில் கொண்டுவரப்பட்ட விதிகளைத் தடை செய்துவிட்டார். கோயில்களை ஆகமக் கோயில்கள் – ஆகமம் இல்லாத கோயில்களாக பிரித்துவிட வேண்டும் என்றும் ஆகமக் கோயில்களின் விதியை மாற்றக்கூடாது என்றும் அத்தீர்ப்பு திட்டவட்டமாக கூறிவிட்டது. இதுகுறித்து பரிசீலிக்க குழுக்களையும் அறிவித்தது. ஆகமக் கோயில்களை கண்காணிக்க முன்னாள் தேர்தக் ஆணையர் கோபால்சாமி அய்யங்காரை நீதிமன்றம் நியமித்தது. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் நோக்கத்தையே தோற்கடித்து விட்டது இத்தீர்ப்பு.

2023இல் வந்தது இந்தத் தடை. இந்த தடையை எதிர்த்து அறநிலையத்துறை மேல்முறையீடு செய்திருக்க வேண்டும். என்ன காரணத்தினாலோ, ஓராண்டு ஓடிய பிறகும் அதை செய்யவில்லை. ஏற்கனவே உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், ஆகமங்களில் ஜாதி தடையாக இருக்க முடியாது என்ற ஒரு சிறந்த தீர்ப்பை வழங்கிய நிலையில் அர்ச்சகர் நியமனங்களை அறநிலையத்துறை செயல்படுத்தத் தவறியது. இறுதியாக 2023இல் உச்சநீதிமன்றத்தின் எம்.எம்.சுந்தரேஷ் தலைமையிலான அமர்வு, ஏற்கனவே அர்ச்சகர் நியமனங்களில் இருந்த அதே நிலை அப்படியே நீடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதுதான் இப்போதைய நிலை. பணி நியமனங்களுக்கான தடைகள் நீடித்து வரும் போது கோயில்களில் ஓராண்டு பயிற்சிகளைப் பெறுவோருக்கு சான்றிதழ்களை வழங்க முடியுமே தவிர பணி நியமனம் செய்ய இயலாது.

எனவே அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் சட்டம் 26 பேருக்கு வழங்கி விட்டோம் என்ற அடையாள சட்டமாக இருந்துவிடக்கூடாது. உயிர்த்துடிப்புடன் இந்த சமுதாயப் புரட்சி செயல்வடிவம் பெற தமிழ்நாடு முதல்வர் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். ‘‘பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்’’ என்று இந்தத் திட்டம் பற்றி கலைஞர் கூறினார். அந்த முள்ளை அகற்ற மிகவும் கவலை எடுத்துக் கொண்டார். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் அதே உணர்வுடன் இத்திட்டத்தை அமுல்படுத்த முன்வந்தார். ஆனால் அது செயல்படாமல் முடங்கி நிற்கிறது. அறநிலையத்துறை ஏன் முனைப்புக் காட்டவில்லை என்ற கேள்வி எழுகிறது. தடைகளை அகற்ற முதல்வர் முன்வர வேண்டும். இதற்கு உரிய ஆலோசனைகளைப் பெற்று செயல்படுத்த சட்ட வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று உரிமையுடனும் கவலையுடனும் கேட்டுக்கொள்கிறோம்.

# கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்ட புராண நாடகம்

*தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கடந்த ஒரு வாரமாக நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அதில், 11.11.2024–இல், ஒரு நிகழ்ச்சியாக, “ஸ்ரீ நரசிம்மர்” புராணநாடகம் நடத்தப்படும் அறிவிப்பு வெளியாகி இருந்தது கண்டு, கடும் அதிர்ச்சி அடைந்து, பல தரப்பிலும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. உடனடியாக, இந்த நிகழ்ச்சியை ரத்து செய்து, இன உணர்வோடும், திராவிடர் இயக்க கொள்கைப் பற்றோடும் நடவடிக்கை எடுத்த அரசினைப் பாராட்டி, வணங்குகிறோம்! இந்த நிகழ்வினை ஒட்டி, வரலாறு தெரியாத இளையோருக்கும், கொள்கை வறட்சி ஏற்பட்டு வழிமாறிக் கிடக்கும் ஒரு சில திராவிடரியக்கத் தோழர்களுக்கும் சில செய்திகளை அறியத் தந்திடவே இந்தப் பதிவு!*

*தோழர்களே! ஆரியர்களின் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களில் முதலிரண்டு சமஸ்கிருத ஸ்லோகங்கள் அனைத்துமே தேவர்களின் எதிரியான அசுரர்களை அழிக்க எமக்கு பலம் தா எனவும், அவர்கள் அழிந்திட அருள் புரிவாயாக என மேலோக தேவேந்திரவாதிகள் இறைவனை வேண்டுவதாகவே உள்ளன. இதில், அசுரர்கள் என்போர் திராவிட அரசர்களே என பண்டித ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர் உள்ளிட்ட அறிஞர்கள் நிறுவி உள்ளனர்.*

*இதன் அடிப்படையிலேயே, கடவுளர் கதைகள் புனையப்பட்டு, அழிக்கப்பட்ட நமது திராவிட மன்னர்களான சூரபத்மன், இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் என்கிற வரிசையிலே இரண்யனும் இடம் பெறுகிறான். இந்த வகையிலே, திராவிட அரசனான இரண்யனை, திருமாலின் அவதரமான ஸ்ரீ நரசிம்மர், நாராயணனை ஏற்க மறுத்தும், தனது மகன் பிரகலாதன் வணங்கிடுவதைத் தடுத்தும் ‘மாபாதகம்’ புரிந்த திராவிட மன்னனை வதம் செய்ததாகக் கூறும், ‘பக்த பிரகலாதன் கதை’ பாகவதப் புராணத்தில் வருகிறது.*

*சங்க இலக்கியத்தில் உள்ள கடையேழு வள்ளல்களான பாரி, ஓரி, தலை கொடுத்த குமணன் போன்ற நாடகங்களும், அறிஞர் அண்ணா எழுதிய சிவாஜி கண்ட இந்துராஜ்யம், நீதி தேவன் மயக்கம் போன்ற நாடகங்களும் நாம் தானே போட முடியும்? இவற்றைக் கருத்தில் கொள்ளலாமே! நிற்க. திராவிட இன மக்களை இழிவுபடுத்தும் இராமாயண காவியம் என்பதற்கு மறுப்பாக, தன்மான இயக்கப் பெரும் புலவர் குழந்தை, ‘இராவண காவியம்’ எனும் பெரு நூலைப் படைத்தளித்தார்கள்! இதே உணர்வோடு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ‘இரண்யன் அல்லது இணையற்ற வீரன்’ எனும் நாடகத்தைப் படைத்தார். இந்த நாடகத்தின் கதைச் சுருக்கம் என்பது,*

*‘வெற்றி கொள்ள முடியாத பெரும் வீரனாகத் திகழ்ந்த இரண்ய மன்னனை வீழ்த்திட, ஆரிய மங்கை சித்ரபானுவை அனுப்பி, இளவரசன் பிரகலாதனை மயக்கி, அவனை, ‘நாராயண பக்தனாக்கி’, சூழ்ச்சி செய்து, இரண்யனை ஆரியப் படை ஆட்கள் சூழ்ந்து கொண்டு முதுகில் குத்திக் கொல்வதாக அமைத்துள்ளார் பாரதிதாசன்! இந்த நாடகத்தின் உச்சக் காட்சியில் பிரகலாதன், ‘இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்’ என்றதும், வீரா வேசம் கொண்ட இரண்யன் வாளேந்தியபடி தூணை எட்டி உதைப்பார். தூணின் மறைவான இடத்தில், ஏற்கனவே சிங்கத்தோல் போர்த்தியபடி பதுங்கியுள்ள எதிரி, இரண்யன் மீது பாய்ந்ததும், ‘அடே! நான் தூணை உதைத்ததும் நாராயணன் வருகிறான்; நாராயணனையே உதைக்கிறேன்; யார் வருகிறான் பார்ப்போம்’ என ஆவேசத்தோடு முழங்கியபடியே அவனை எட்டி உதைத்து வெட்டிக் கொல்வான் இரண்ய மன்னன்! இந்தச் சூழலில், திரைச் சீலைகளுக்குப் பின்னே பதுங்கியிருந்த ஆரியர்கள், இரண்யன் முதுகில் குத்திக் கொல்வர் சூழ்ந்தபடி!*

*காட்சியின் நிறைவிலே, பிரகலாதன், சித்ரபானு உள்ளிட்ட எதிரிகளை வெட்டிக்கொன்று, சேனாதிபதி முழங்கிடும் வீர வசனங்கள் நம் இரத்தத்தை இன உணர்வுத் தீயாகக் கொதிக்க வைக்கும்! அந்தப் போர் முழக்க வசனங்கள் புரட்சிக் கவிஞரின் திராவிட நாட்டு விடுதலை முழக்கமாகவே அமைந்துள்ளன! திராவிடரியக்கப் புலவரும், பின்நாளில் தமிழ்நாடு சட்டமன்றத் துணைத் தலைவருமாக இருந்த புலவர் கோவிந்தன், காங்கிரஸ் அரசால் தடை செய்யப்பட்ட இந்த நாடகத்தை செய்யாறில் நடத்திக் கைதான வரலாறும், திராவிடரியக்க ஆட்சியில் அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் முன்னிலையில், பொங்கல் விழா நாடகமாக புலவர் நடத்தினார் என்பதும் வரலாறு! அதுமட்டுமல்ல; ‘இராமனை, செருப்பால் அடித்தார் பெரியார்’ என எதிரிகள் பிரச்சாரம் செய்த, வரலாற்றுச் சிறப்புமிக்க சேலம் மாநாட்டு நிகழ்ச்சியில் போடப்பட்ட இன உணர்வு நாடகமே, ‘இரண்யன் அல்லது இணையற்ற வீரன்’ என்பதாகும்!*

*இத்தகைய வீர வரலாறும், தன்மான உணர்வும் கொண்ட, திராவிடரியக்க நாயகனான இரண்யனை வதம் செய்கிற புராணப் புளுகு நாடகத்தை, திராவிட அரசின் அங்கமான தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமே அரங்கேற்றத் துணிந்தது கடும் கண்டனத்துக்கு உரியது. இதனை அறிந்த திராவிட மாதிரி ஆட்சி, எவ்விதத் தயக்கமும் இன்றி இந்த நிகழ்ச்சியை ரத்து செய்தது என்பது போற்றிப் பாராட்டி, நன்றி சொல்லக்கூடிய நிகழ்வாகும்!*

தடா ஒ.சுந்தரம், M.A., B.L.,
முகநூல் பதிவில் இருந்து..

## இரணியன் யார்?

இரணியன் ஒரு சுயமரியாதை வீரனேயாவான். இரணியன் கதை ஒரு சுயமரியாதைக் கதையேயாகும்.

– பெரியார், குடிஅரசு, 26.2.1944

பாகவதத்தை எடுத்துக்கொண்டால் இரணியன் எவ்வளவு தூரம் ஜாதியை ஒழிக்கப் பாடுபட்டு இருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவன் தீவிரமாகவே வேலை செய்திருக்கிறான். ‘‘பார்ப்பனர் (அதாவது பார்ப்பனீயம்) எங்கு எங்கு இருக்கிறார்களோ அவர்களுடைய வீட்டை எல்லாம் இடித்துத் தள்ளுங்கள்; கையிலே மண்வெட்டி, பிக்காசுகளுடன் போங்கள், மூக்கைப் பிடித்துக்கொண்டே உட்கார்ந்து இருக்கின்றவர்களைக் கண்டால் மண்டையிலேயே அடியுங்கள். செய்கின்ற ஓமங்களைக் கலைத்துவிடுங்கள்’’ என்று கூறி தனது ஆள்களை அனுப்பினான் இரணியன் என்பதாகப் பாகவதம் கூறுகிறது.

பெரியார், விடுதலை, 21.1.1951

# பெரியார் - மறைமலை அடிகள் முரண்பாடு

சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.10.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் திறந்து வைத்து ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..

குன்றக்குடி அடிகளார், திருநாவுக்கரசரையும், திருமூலரையும் தான் அதிகமாகப் பேசியிருக்கிறார், அதைவிட திருக்குறளை அதிகமாகப் பேசியிருக்கிறார். தமிழனுடைய நெறி என்பது திருக்குறள் நெறி என்று சொல்லும் அவர், மார்க்சியத்தையும் ஆதரித்துப் பேசியுள்ளார். வள்ளுவ நெறிப்படி மார்க்சியம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார். ஜாதி ஒழிப்புப் போராட்டங்கள் ஒருபுறமும், வர்க்கப் போராட்டங்கள் இன்னொரு புறமும் நடக்க வேண்டும் என்றார்.

## பெரியார் – மறைமலை அடிகளார்

மறைமலை அடிகளார் பார்ப்பனியத்தையும், சமஸ்கிருதத் திணிப்பையும் கடுமையாக எதிர்த்தார். நீதிக்கட்சித் தொடங்கப்பட்ட போது அதை ஆதரித்தும், சர்.பிடி.தியாகராயர் மறைந்த போது தனது வேதனையையும் பதிவு செய்திருக்கிறார். ஆனால் நாத்திகம்? எதிர் ஆத்திகம்? என்ற நிலை வருகிற போது நாத்திகத்தைக் கடுமையாக சாடியுள்ளார்.

மறைமலை அடிகளார் தொடக்கத்தில் பெரியாரையும், சுயமரியாதை இயக்கத்தையும் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறார். சுயமரியாதை இயக்கத்தை எப்படி எந்த வழியில் எதிர்ப்பது என்பதே அவரது சிந்தனையாக இருந்திருக்கிறது என்பதற்கு அவரது நாட்குறிப்பில் அவர் பதிவு செய்துள்ள கருத்துக்களே சான்றுகளாக இருக்கும். பார்ப்பனரல்லாதார் உரிமைக்காக தொடங்கப்பட்ட இயக்கம், சைவத்தை ஏன் எதிர்க்க வேண்டும்? வைணவ மதம் சார்ந்த இராமாயணத்தை எதிர்க்கட்டும், சைவ மத நூலான பெரியாபுராணத்தை ஏன் எதிர்க்க வேண்டும் என்ற கேள்விகள் தீவிர சைவர்களிடம் இருந்து எழுந்தன.

பெரியாரின் 'குடிஅரசு' இராமாயணத்தை 'அக்குவேறு ஆணிவேராக' அலசி எடுத்தது. சந்திர சேகரப் பாவலர் என்ற பெயரில் இ.மு. சுப்பிரமணியபிள்ளை கண்டம் கண்டமாக இராமாயணத்தை கிழித்துப் போட்டார். சைவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். அதைத் தொடர்ந்து 'குடிஅரசு' பார்வை பெரிய புராணத்தின் மீது விழுந்தது. 'மெய்கண்டான்' என்ற புனைப் பெயரில் 1928 ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் எழுதத் தொடங்கினார். 'சமயச் சண்டைகளை உருவாக்கும் நூல் பெரிய புராணம். ஜாதி பேதத்தைப் புகட்டும் நூல் பெரிய புராணம். கொலை செய்திகளை சைவத்தின் தொண்டு என்று கூறும் நூல் பெரிய புராணம் என்ற கட்டுரைகள் இடி எனத்தாக்கியது. அவ்வளவுதான் சைவத் தீவிரவாதிகள் வெகுண்டெழுந்தனர். சைவ மதம் ஆரிய மதமல்ல என்றும் தமிழர் மதம் என்று முன்வைத்த கருத்துக்களை பெரியார் ஏற்கவில்லை.


திராவிட இயக்க ஆய்வு நூல் எழுதிய 'இர்ஷ்விக்' போன்ற ஆய்வாளர்கள். அது பார்ப்பனரல்லாத உயர்ஜாதி வெள்ளாளர்கள் நலனுக்காகத் தொடங்கப்பட்டது என்ற உண்மைக்கு மாறான செய்திகளை உள்நோக்கத்தோடு பதிவு செய்தனர். அடிப்படையில்லாத அப்பட்டமான பொய் என்பதற்கு சைவத்துக்கும், சுயமரியாதை இயக்கத்துக்கும் இடையே நடந்த போராட்டங்களே வலிமையான சான்றாகும்.

'சைவ சித்தாந்த மதச் சமாஜம்' என்ற சைவ இதழில் அதன் ஆசிரியராக இருந்த ம.பாலசுப்ரமணிய முதலியார் இப்படி எழுதினார்.

"சுயமரியாதை இயக்கத்தில் உள்ள நல்ல கருத்துகள் எல்லாம் மறைமலை அடிகள் என்ற ஞானத் தந்தை போட்ட பிச்சை என்பது தமிழ்நாடு நன்கு அறிந்ததே. இப்பிச்சை வாங்கிப் பிரச்சாரம் செய்பவர்கள், பிச்சையிட்ட பிதா செய்த நன்றியை மறப்பாராயின் அப்பிரச்சாரம் முழுமையும் கடலில் பெய்த மழை போல் ஒரு பயனும் தராது" (மேற்குறிப்பிட்ட இதழ் ஜூன் 1929)

மறைமலை அடிகள் அம்பலவாணன் என்ற புனைப் பெயரில் சுயமரியாதை இயக்கத்தை "வைணவர்களின் குறும்பு" என்று எழுதினார்.

**விடுதலை இராசேந்திரன்**





"சுயமரியாதை இயக்கம் என்பது சைவ சமயத்தை அழிப்பதற்கு சில வைணவர்கள் சூழ்ச்சியாகத் துவங்கிய ஒரு தீய முயற்சியாகும். சுயமரியாதை இயக்கத்துக்கு தலைவரென நிற்கின்றவர் வைணவர். அவர் தம் தமையனாரும் அறிவில்லாத எத்தனையோ சைவ மக்களுக்குப் பட்டை நாமத்தை பரக்கச் சாத்தி அவர்களை வைணவ மதத்தில் சேர்த்துவரும் கொடிய வைணவர் என்று கேள்விப்படுகிறோம். இவர்களுக்குத் துணையாக நிற்கின்ற சிலரும் வைணவர்கள், நியாயவாதிகள் எனும் பொருளுடைய ஜஸ்டிஸ் கட்சிக்கு தலைவர் என நிற்கின்ற சிலரும் வைணவர்கள். இவர் எல்லாம் வைணவராதலோடு தெலுங்கு மொழிப் பேசுந் தெலுங்கர்கள்" என்று எழுதினார். (சிவநேசன் இதழ் 1926, ஆனி விபவ)

பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்காக பெரியார் களமாடிய போது அவரை தெலுங்கன், தமிழர் விரோதி என்று 'முத்திரை குத்தும்' துரோகக் குரல்கள் 1925ஆம் ஆண்டில் இருந்தே தொடங்கிவிட்டன. சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பன – பார்ப்பனரல்லாத

திராவிட இயக்க ஆய்வு நூல் எழுதிய 'இர்ஷ்விக்' போன்ற ஆய்வாளர்கள். அது பார்ப்பனரல்லாத உயர்ஜாதி வெள்ளாளர்கள் நலனுக்காகத் தொடங்கப்பட்டது என்ற உண்மைக்கு மாறான செய்திகளை உள்நோக்கத்தோடு பதிவு செய்தனர். அடிப்படையில்லாத அப்பட்டமான பொய் என்பதற்கு சைவத்துக்கும், சுயமரியாதை இயக்கத்துக்கும் இடையே நடந்த போராட்டங்களே வலிமையான சான்றாகும்.

மாணவர்களிடையே பாகுபாடுகளை திணித்ததை எதிர்த்து பெரியாரும், வரதராஜுலு நாயுடுவும், திருவிகவும் போர்க்கொடி உயர்த்திய போது தெலுங்கு நாயுடுவும், கன்னட பெரியாரும் இணைந்து எதிர்க்கிறார்கள் என்று வ.வே.சு அய்யர் கூறினார். பார்ப்பனியம் தனது 'வர்ணாசிரம 'முகத்தை' வெளிப்படுத்தாமல் பதுங்கும் முகமூடியாக இந்த தெலுங்கர், கன்னடர் அடையாளங்களை கையில் எடுப்பது தொடர்ந்து அரங்கேறிவருகிறது. (அண்மையில் பார்ப்பனர் ஆர்ப்பாட்டத்தில் கஸ்தூரி என்ற பார்ப்பன நடிகை இதே மொழியைத் தான் தரம் தாழ்ந்து பேசியிருக்கிறார்.)

குருகுலப் போராட்டத்திலும் காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த போராட்டத்திலும், பெரியாரோடு கரம் கோர்த்து நின்றவர் திருவிக. அவரும் பிறப்பால் ஒரு சைவர் தான். மறைமலை அடிகளாரின் 'சைவ வெறி' சார்ந்த அணுகுமுறையை திரு.வி.க ஏற்கவில்லை. அப்போது 'நவசக்தி' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர் திரு.வி.க, மறைமலை அடிகள் எழுதிய இந்தக் கட்டுரையை திரு.வி.க 'நவசக்தியில்' வெளியிட மறுத்துவிட்டார் என்பதாலேயே – தீவிர 'சைவ' இதழாக வெளிவந்த 'சிவநேசன்' பத்திரிகையை மறமலை அடிகள் நாட வேண்டியிருந்தது என்கிறார் ஆய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி. இந்த நிலையில் மறைமலை அடிகளாரின் சுயமரியாதை இயக்க எதிர்ப்பு 1928. ஜூலை 22இல் எரிமலையாக வெடித்தது.

இராயப்பேட்டையில் பக்த ஜன சபா என்ற இடத்தில் மறைமலை அடிகளார் பங்கேற்ற கூட்டம் ஒன்று நடைபெற்றது. 22, ஜூலை 1928 அன்று அந்தக் கூட்டத்தில் இந்துமதத்தின் பெருமைகளை அடிகளார் பேசிக்கொண்டிருந்த வேளையில்

"நாத்திகம் என்ற கருத்து இன்றைக்கு சமூகத்துக்குப் பெரிய கேடாக வந்திருக்கிறது" நாத்திகம் பேசுபவர்களை சும்மாவிடக்கூடாது. இந்துமதத்தையும், சைவத்தையும் பார்த்து நாத்திகம் பேசுகிறவர்கள், இஸ்லாமியர்களிடம் இப்படி பேசியிருந்தால் அவன் இவர்களின் குடலை உறுவி மாலையாகப் போட்டிருப்பான். ஆனால் நம்முடைய சமுதாயம் இப்படிப்பட்ட பேச்சுக்களையெல்லாம் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று பேசினார்.

அந்த கூட்டத்தில் பங்கேற்றிருந்த சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த தண்டபாணி பிள்ளை, திராவிடன் பத்திரிகையின் ஆசிரியரான கண்ணப்பர் ஆகியோர் மறைமலை அடிகளாரின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் அந்தக் கூட்டம் அடிதடியில் முடிந்தது.

குடிஅரசு இதழிலும் மறைமலை அடிகளாரைக் கண்டித்து தலையங்கங்களும், கட்டுரைகளும் வெளியாகின. 'சுவாமி வேதாச்சலத்தின் வித்தைக்கு வணக்கம்- அவர் புத்தியை என்ன செய்வது? என்ற தலைப்பில் கைவல்ய சாமி ஒரு கடுமையான எதிர்வினையாற்றினார்.

"சைவம் பேசிக் கொண்டு மறைமுகமாகப் புலால் உண்ணுகிறார் என்று குற்றம் சாட்டினார்" சாமி வேதாச்சலம் மதத்தை நிலை நிறுத்தவர் ஆச்சாரியலல; விதிகர்த்தாவுமன்று, கூலிக்குப் படிப்புச் சொல்லுவதற்கு ஒப்பந்தம் பேசும் வித்வான்" என்றும் கடுமையாகச் சாடினார். (குடிஅரசு 2.08.1928)

மறைமலை அடிகள் பேசியதை தெளிவுபடுத்த வேண்டும். இல்லையேல் கடுமையாக எழுத நேரிடும் என்று 'குடிஅரசு' இரண்டு முறை எச்சரித்தது. இறுதியாக பெரியாருக்கும் மறைமலை அடிகளாருக்கும் சமரசம் உருவாக்கும் முயற்சிகள் நடந்தன. திரு. வி.கவும், கி.ஆ.பெ.விஸ்வநாதமும் மறைமலை அடிகளாரின் பல்லாவரம் இல்லத்தில் நேரில் சந்தித்து பேசினார்கள். (1928 – ஆகஸ்டு 24)

அதில் நான் எந்தவொரு சூழ்நிலையிலும் பெரியாரையும், மற்றவர்களையும் எதிரியாகக் கருதவில்லை. அவர்களது வாழ்க்கையை முடிக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கு சிறிதும் கிடையாது. நான் பேசியதை தவறாகப் புரிந்து இப்படி வெளிப்படுத்திவிட்டார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு அப்படி ஒரு புரிதல் இருக்கும் என்று சொன்னால் அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் பிரச்சனையில் அவருடன் எனக்கு முழு உடன்பாடு உள்ளது. ஆனாலும் இந்த நாத்திகப் பிரச்சனையில் அவருடன் எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் இந்தப் பிரச்சனையில் அவர் மனம் புண்பட்டிருந்தால் நான் வருத்தம் தெரிவிக்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

பெரியாருக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதத்தை அப்போது பெரியார் சுற்றுப்பயணத்தில் இருந்ததால் திராவிடன் இதழ் ஆசிரியர் கண்ணப்பரிடம் வழங்கினார் கி.ஆ.பெ. விசுவநாதனிடமிருந்து. அதை பெற்றுக்கொண்ட கண்ணப்பர் தனது திராவிடன் பத்திரிகையில் "மறைமலை அடிகளார் மன்னிப்புக் கேட்டார்" என்ற தலைப்பில் அந்தக் கடிதத்தை வெளியிட்டார். சுற்றுப்பயணம் முடித்து வந்த பெரியார் இதைப் பார்த்தவுடன், இந்தக் கடிதம் எனக்கு தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டது. இதை நீங்கள் வெளியிட்டு அவரை அவமானப்படுத்துவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இப்படி அடிகளார் மன்னிப்புக் கேட்டார் என்று பத்திரிகையில் பிரசுரமானதுக்கு நான் வருந்துகிறேன். இந்த கடிதத்தை வெளியிட்டதற்காக அடிகளாரிடம் நான் தலை தாழ்ந்த மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன் என்று பெரியார் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

அதற்கு பிறகு அவருடைய அறிவுக் கொத்து எனும் நூலில் யார்? அயலார்? யார் உள்நாட்டார்? என்று சொல்லுகிற போது, பிரிட்டீஷ்காரர்கள் மட்டுல்ல, வந்தேறி ஆரியப் பார்ப்பனர்களும் அயலார் தான் என்பதை சான்றுகளுடன் நிறுவியிருந்தார். அது சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பாடத்தில் இருந்து எடுக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் கடுமையாகப் போராடிய போது மறைமலை அடிகளாருக்கு ஆதரவாக களத்தில் நின்று போராடியவர் பெரியார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# நம்பியூரில் எழுச்சியுடன் நடந்த சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா



**ஈரோடு வடக்கு:** நம்பியூர் ஒன்றியக் கழக சார்பில் சுயமரியாதை இயக்க மற்றும் குடிஅரசு நூற்றாண்டு விழாத் தெருமுனைக் கூட்டம் 10.11.2024 அன்று பருத்திக்காட்டில் நடைபெற்றது.

கழகத் தோழர் அழகிரி கழகக் கொடியை ஏற்றி வைத்தார். நம்பியூர் பேருந்து நிலையத்தில் கழகக் கொடியை வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. பெரியார் விழுது அறிவுக்கனல் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினார். நம்பியூர் ஒன்றியச் செயலாளர் இரமேசு, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் ஆதித்தமிழர் பேரவை, விசிக, தமிழ்ப் புலிகள் கட்சி உள்ளிட்ட தோழமை இயக்கத்தினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வக்குமார் நன்றி கூறினார். கோசனம் மயில்சாமி அனைவருக்கும் தேனீர் வழங்கினார். இரவு உணவை சுரேஷ்குமார் ஏற்பாடு செய்தார்.

# தீண்டாமைப் பட்டியல்; கோவை மாநகரக் கழகம் களப்பணி

**கோவை:** கோவை மாநகர மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் கோவை தமிழ்ப்புலிகள் கட்சி அலுவலகத்தில் 09.11.2024 அன்று நடைபெற்றது.

**கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.**

• கடந்த 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 29, 30 ல் சேலத்தில் நடைபெற்ற “இது தமிழ்நாடு இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாட்டின்” தீர்மானத்தை செயல்படுத்தும் விதமாக ‘வைக்கம் போர் முடியவில்லை’ என்ற தலைப்பில் ஜாதி எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்து கோவை மாவட்டம் முழுவதும் முதற்கட்டமாக எடுக்கப்பட்ட ஜாதி தீண்டாமை கொடுமைகள் பட்டியலை கோவை மாவட்ட ஆட்சியரிடம் நவம்பர் 25 அன்று புகார் மனுவாக வழங்குவது சில நாட்கள் அவகாசம் கொடுப்பது நியாயமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் ஜனவரி 26 அன்று கோவையில் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

• புரட்சியாளர்கள் பெரியார் – அம்பேத்கர் நினைவு நாள் பொதுக்கூட்டத்தை டிசம்பர் 24 அன்று கோவை சிவானந்த காலனியில் நடத்துவது.

• கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தா சேர்ப்பு பணிகளை டிசம்பர் 15க்குள் முடிப்பது.

• நவம்பர் 26, அரசியல் சட்ட எரிப்பு நாள் தெருமுனைக் கூட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

# பேராவூரணியில் மாணவர் சந்திப்பு

பேராவூரணியில் தஞ்சை மாவட்ட திவிக சார்பில் மாணவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி தோழர் நிலவன் அவர்கள் இல்லத்தில் 03.11.2024 ஞாயிறு மதியம் 2.30மணிமுதல் மாலை 5.30மணி வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுடன் கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் அவர்கள் கலந்துரையாடினார்.

“பெரியார் ஏன் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். பெரியார் தொண்டுக்கு முன் தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாத பெரும்பான்மை மக்கள் சமூகத்தில், கல்வியில், அரசியலில் எந்த நிலையில் இருந்தனர், பெரியாரின் தொண்டால் ஏற்பட்ட சமூக மாற்றம் குறித்தும் விளக்கிக் கூறினார்.

பெரியார் கொள்கையின் இன்றைய தேவை குறித்தும் மாணவர்களிடம் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விடையளித்தார். நிகழ்வில் தஞ்சை மாவட்டச் செயலாளர் கு.பாரி தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம் , பேராவூரணி நகர அமைப்பாளர் தா.கலைச்செல்வன், ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளர் சிவசுப்பிரமணியன், கவிமணி, நிலவன் ஆகியோர் கலந்து கொண்டனர். கலந்துரையாடலில் 12 மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பெரியார் சமூகநீதி தொழில் வளர் மையம்

சென்னை ஐ.ஐ.டி.எம் வளாகத்தில் உள்ள கலையரங்கத்தில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் ஒருங்கிணைத்த ‘ஸ்டார்ட் அப் சென்னை - செய்க புதுமை’ நிகழ்வு நடந்தது. இதில், சமூக வளர்ச்சி சார்ந்து இயங்கும் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பட்டியலின, பழங்குடியின தொழில் முனைவோர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக ‘பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையத்தினை’ துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்து பேசியதாவது:

பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையம் மற்றும் ‘தொழில் நயம்’ என்ற பிரத்யேக உதவி மையத்தை தொடங்குவதில் பெருமை அடைகிறேன், இது ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு தங்கள் தயாரிப்புகளை முறையான வடிவமைப்பு மற்றும் திறம்பட சந்தைப்படுத்த வழிகாட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் வணிக திறன்களை வெளிப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவும் நோக்கத்தில் ‘ஸ்டார்டிஃபை’ என்ற போட்டியையும் நாங்கள் தொடங்குகிறோம்.

மேலும், தமிழகம் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் அமைக்கப்படும் ப்ரீ-இன்குபேஷன் சென்டர்கள் என்ற சிறப்பு முயற்சியை அறிமுகப்படுத்த உள்ளோம். கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து புத்தொழில்களை ஊக்கப்படுத்தும் விதமாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இங்கே கையெழுத்திடப்பட்டுள்ளன.

திராவிட மாடல் அரசின் கீழ், தமிழ்நாட்டில் தொழில் முனைவோர் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளது. நமது அரசு பதவியேற்பதற்கு முன், 2,300 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன. தற்போது இந்த எண்ணிக்கை 2,300ல் இருந்து 9,600 ஆக அதிகரித்துள்ளது. மேலும் ஊக்கமளிக்கும் விஷயம் என்னவென்றால், இந்த ஸ்டார்ட்அப்களில் 50% பெண்களால் வழிநடத்தப்படுகின்றன. மானியம், வங்கிக்கடன் என உங்களுக்கு பொருளாதார ரீதியா உதவிடவும், நம்முடைய அரசு தயாராக உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# பிரிட்டிஷ்காரன் செய்த “பாவம்” ஒன்றா? இரண்டா?

**நமது உண்மையான அடையாளத்தை பிரிட்டிஷ் ஆட்சி சிதைத்துவிட்டது என்று கண்ணீர் வடிக்கிறார் ஆளுநர் ரவி.**

நமது உண்மையான அடையாளம் என்ன?

• கணவன் இறந்தவுடன் மனைவியையும் அதே நெருப்பில் போட்டு எரித்தோம்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• குழந்தைகளுக்கு பால்ய ‘விவாஹம்’ செய்தோம்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• நோயாளிகளை கங்கையில் மூழ்கடித்து நமது புரோகிதர்கள் ‘மோட்சம்’ அனுப்பினார்கள்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• நான் மலை மேல் இருந்து உருட்டிவிட்டால் உனக்கு மோட்சம் கிடைக்கும் என்று, நமது புரோகிதர்கள் ‘பருகூடத் பன்னம்’ சடங்கு நடத்தினார்கள்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• பெற்ற முதல் குழந்தையை கங்கை ஆற்றில் வீசினால் புண்ணியம் என்ற கங்காப் ‘பிரவாக்பாதனம்’ செய்தோம்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• ரிக் வேதப்படி ஒரு அப்பாவியைப் பிடித்து, யாகத்தில் ‘பசுவாக்கி’ பிறகு மரத்தில் கட்டி கொலை செய்வது நமது புனித சடங்கு
– 1845இல் பிரிட்டிஷ்காரன் ஒழித்தான்.

• நீரிலோ, நெருப்பிலோ தள்ளிவிட்டு மோட்சத்துக்கு அனுப்பும் ‘மாகப்ருஸ்தானம்’ என்ற நமது பாரம்பரிய சடங்கை பின்பற்றினோம்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• கிரிமினல் குற்றங்களுக்கு பிறந்த ஜாதியைப் பார்த்து தண்டனை வழங்க வேண்டும் என்ற பெருமையோடு வாழ்ந்தோம்’
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• பிராமணர்கள் கொலை செய்தாலும் தூக்கு தண்டனைக் கூடாது என்ற தர்மத்தை பின்பற்றி வந்தோம்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• தீண்டப்படாதவர்களை ஊதியம் கொடுக்காத அடிமைகளாக நடத்தினோம்.
– பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• பெண் குழந்தை பிறந்துவிட்டாலே இது எதுக்கு பொறந்தது என்று அதைக் கொலை செய்த பெருமையோடு வாழ்ந்தோம்.
– 1870இல் பிரிட்டிஷ்காரன் தடுத்தான்.

• கணவனை இழந்தப் பெண்கள் மொட்டையடித்து விதவையாகவே வாழ்ந்து சாக வேண்டும் என்ற நமது தர்மத்தை காத்தோம்.
– பிரிட்டிஷ்காரன் 1855இல் ஒழித்தான்

• பள்ளிக்கூடங்களே திறக்காமல் வேத பாட சாலைகளை மட்டுமே நடத்தினோம்
– பிரிட்டிஷ்காரன் ஒழித்தான்.

இப்படி பிரிட்டிஷ்காரன் செய்த பாவங்கள் ஒன்றா? இரண்டா? பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். ஆனாலும் பிரிட்டிஷ்காரன் செய்த பாவங்களிலேயே கொடுமையிலும் கொடுமையான பாவம்,

இந்த ஆளுநர் பதவி என்ற ஒன்றை உருவாக்கியது தான்.

கோடங்குடி மாரிமுத்து

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : November 15, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran